நல்ல நிலமாகு நண்பா

விதைகள்

VOL -2
ISSUE -22
DEC 2022



HAPPY CHRISTMAS

வாசகர்களுக்கு இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

நல்ல நிலமாகு நண்பா ஊழியத்தின் சார்பாக கிறிஸ்து பிறப்பு & புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

மலர்க்குழு உறுப்பினர்கள்

S. மெர்லின் (ஆசிரியர்)

K.S. பிரசன்னா மெர்லின் (மேலாண்மை)

J. ஜாண் டேனியேல்

Dr. அரவிந்த் ஜெயக்குமார் ம.

J. ஜாக்குலின் ஷைன்

ஹில்டா பாக்கியராஜ்

Desighn by : NNN

ADDRESS

S.Merlin
16/76 Vettukattuvilai,
Kannanoor -629158
Kanyakumari District
Tamilnadu, India
Phone +919486954577,
Whatsapp +918668047378

INTEX

03 டிசம்பர் 25 உண்மையா?

07 வானவியலாளர்கள்

13 அர்த்தமுள்ள கிறிஸ்மஸ்

15 வாழும் ஏரோதுக்கள்

20 கிறிஸ்மஸ் சிந்தனைகள்

23 சிந்திக்கும் காலம்

25-ல் பிறந்தாரா ?

சேவியர், சென்னை

கிறிஸ்மஸ் என்றதும் நினைவில் மின்னலடிக்கும் நாள் டிசம்பர் 25. அன்று தான் இயேசு கிறிஸ்து பிறந்தார் என்று சொல்லி உலகெங்கும் கொண்டாட்டங்களும், உற்சாக திருப் பலிகளும், மகிழ்வின் விருந்துகளும் நடை பெறும். ஆனால் உண்மையில் அது தான் இயேசுவின் பிறந்த நாளா ? என்றால் மிகப்பெரிய கேள்விக் குறியே மிஞ்சும். பெரும்பாலான சிந்தனைகள், டிசம்பர் 25 என்பது இயேசுவின் பிறந்த நாளாய் இருக்க வாய்ப்பில்லை என்றே கூறுகின்றன.

எனில், ஏன் டிசம்பர் 25ம் தியதி இயேசுவின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது ? எனும் கேள்விக்கு பல சித்தாந்தங்கள், பல கதைகள், பல அனுமானங்கள் பதிலாய் நிற்கின்றன.

முதலில், இயேசு என்று பிறந்தார் என்பதைப் பற்றி பைபிள் எதையும் குறிப்பிடவில்லை. விவிலியம் வரலாற்று நூல் அல்ல, அது ஆன்மிக நூல் என்பது நமக்குத் தெரியும். அதனால் தான் வரலாற்றுக் குறிப்புகளை விட வாழ்வியல் குறிப்புகளையே அது அதிகம் பதிவு செய்திருக்கிறது. விவிலியத்தில் இல்லாத ஒரு நாள் என்பதால் அது எந்த நாளாய் இருக்கலாம் என்பதைப் பற்றி விவிலியத்துக்கு வெளியே தான் தேடவேண்டியிருக்கிறது.

இரண்டாவதாக, விவிலியத்துக்கு வெளியே, ஆதித் திருச்சபை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், அங்கும் இயேசுவின் பிறந்த நாளை யாரும் கேக் வெட்டிக் கொண்டாடவில்லை. அவருடைய போதனைகளை பின்பற்றியும், பிறருக்கு உரைத்தும், அன்புடன்

உறவாடியும் வாழ்ந்த மக்கள் இயேசுவின் பிறந்த நாளைப் பற்றி அதிகம் அலட்டிக் கொண்டதாய் வரலாறு இல்லை. ஒருவேளை கிறிஸ்தவர்களுக்கு எதிராய் நடந்த தாக்குதல்களின் அச்சம் காரண மாய் இருக்கலாம்.

கிபி முதல் இரண்டு நூற்றாண்டு களில் நூற்றுக்கணக்கான நூல்கள் வெளியாகின. விவிலியத்தில் இடம்பெறாத புறக்கணிக்கப்பட்ட நூல்களான தோமா நற்செய்தி, நிக் கோதேமு நற்செய்தி, மகதலேனா நற்செய்தி என வரிசை கட்டி வந்த எந்த நூல்களிலும் இயேசுவின் பிறப்பின் தேதி குறிப்பிடப்படவே இல்லை ! எனவே இயேசு என்று பிறந்தார் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது.

லூக்கா நற்செய்தியாளரின் கூற்று படி, இடையர்கள் இரவெல்லாம் தங்கள் கிடைகளைக் காவல் காக்கும் நேரத்தில் இயேசுவின் பிறப்பு நிகழ்கிறது. டிசம்பர் மாதம் பனியினால் நிரம்பியிருக்கும் காலம். அதுவும் பெத்லேகேம் யூதேயா பகுதிகள் கடுங்குளிரில் விறைக்கும் காலம். அந்த காலத் தில் இரவில் ஆடுகளை காவல் காப்பது கிடையாது. எனவே டிசம்பர் மாதம் இயேசு பிறந்தி ருக்க வாய்ப்பில்லை என்பது ஒரு வலுவான அனுமானம்.

அதே போல, அந்த கடுங்குளிர் காலத்தில் மக்கள் பயணம் செய்வதும் கிடையாது. பயணம் செய்யாத காலகட்டத்தில் அக ஸ்து மன்னன் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த அழைப்பு விடுப்பதும் நடக்காத காரியமே. அதுவும் 150 கிலோ மீட்டர் தூரம் அந்தக் குளிர் காலத்தில் மரியாவும் யோசேப்பும் பயணிப்பது சாத்திய மற்ற ஒன்றாகவே கருதப்படுகிறது. எனவே அந்த சிந்தனையின் அடிப்படையில் பார்த்தாலும் டிசம்பர் 25 என்பது சரியாய் இருக்காது எனும் சிந்தனையே வலுவடைகிறது.

விவிலியத்துக்கு வெளியே திருக் குரான் நூலைப் பார்த்தால், அதில் "பேரீத்தம் பழங்கள் கனிந்தி ருக்கும் காலத்தில் இயேசு பிறந்தார். உடனே ஒரு வானதூதர், "ஈச்ச மரத்தின் கிளைகளை உம்பக்கம் இழுப்பீராக, அது உன்மீது கனிந்த பேரீத்தப்பழ ங்களை உதிர்க்கும்" என்கிறார். பேரீத்தம் பழங்கள் கனிந்து தொங்கும் காலம் நிச்சயம் குளிர்காலம் அல்ல. பேரீத்தம் பழங்களின் காலம் ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களே. எனவே அதில் ஒரு மாதமாய் இருக்கலாம் என்பது ஒரு கணிப்பு.

அலெக்ஸ்ந்திரியாவைச் சேர்ந்த புனித கிளமன்ட்ஸ் தனது குறிப்பில், இயேசு கிறிஸ்து பிறந்தது எப்போது என தெரியாது அது மே மாதம் இருபதாம் தேதியாய் இருக்கலாம் என தனது ஆய்வை பதிவு செய்கிறார். அவரே

பிற்காலத்தில் இயேசு நவம்பர் 18ம் தியதி பிறந்திருக்கலாம் என தனது இன்னொரு பார்வையையும் பதிவு செய்தார். இல்லை இதெல்லாம் தவறு, ஏப்ரல் 20 அல்லது 21 இயேசு பிறந்திருக்கலாம் என வேறு சிலர் அப்போது கூறினார்கள். கிபி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த டே பாஸ்டா கம்ப்யூட்டஸ் இன்னொரு ஆய்வாளர் மார்ச் 28ம் தியதியை கிறிஸ்மஸ் தினம் என முன்மொழிகிறார்.

இரண்டாம் நூற்றாண்டின் பிற் பகுதி, மூன்றாம் நூற்றாண்டின் துவக்க காலத்தில் வாழ்ந்த Sextus Julius Africanus எனும் கிறிஸ்தவ ஆய்வாளர் ஆதாமுக்கும் இயேசு வுக்கும் இடைப்பட்ட காலம் 5500 ஆண்டுகள் என்று கணித்தார். 5501 ம் ஆண்டு இயேசுவின் பிறப்பு மரியாவுக்கு முன்னறிவிக்கப்பட்டது என்றார். அது மார்ச் 25ம் நாள் என்று கணித்தார். அந்த நாளிலிருந்து 9 மாதங்கள் கணக்கிட்டு, டிசம்பர் 25 என்பதை இயேசுவின் பிறந்த தினமாகக் குறித்தார்கள் என்கிறது இந்த மரபு. காரணம், யூத நம்பிக்கையின் படி இறை தன்மை உடையவர்கள் பிறந்த நாளில் இறப்பது அவர்களுடைய இறைத் தன்மையை உறுதி செய்வதாய் நம்பினார்கள்.

மூன்றாம் நூற்றாண்டில் கொண்டாடப்பட்டு வந்த ஒரு பிரபலமான விழா சூரியக் கடவுளுக்காகக் கொண்டாடப்படும் ஸால் இன்விக்டஸ் எனும் விழா. இது டிசம்பர் 25ம் தியதி கொண்டாடப்பட்டு வந்தது. அப்போது கிறிஸ்தவ மதம் அங்கீகரிக்கப்படவில்லை. அதன் பின் வந்த கான்ஸ்டண்டைன் மன்னன் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டான். அவன் அந்த சூரிய விழாவை அப்படியே கிறிஸ்மஸ் விழாநாளாக மாற்றினான். **மக்களுடைய பார்வை சூரியக் கடவுளை விட்டு விலகி, இயேசுவின் மீது பதிய வேண்டும் என்பதும், பிற மத விழாவானது நீர்த்துப் போக வேண்டும் என்பதும் அவனது சிந்தனைகளாக இருந்தன.** கிபி 336ல் அதிகாரபூர்வமாக கிறிஸ்மஸ் டிசம்பர் 25ம் நாள் கொண்டாடப்பட்டது.

In 313 AD Emperor Constantine petitioned for the Roman Empire to become two separate dominions. Byzantium would be the new capital of the Eastern Roman Empire, of which he would be the Emperor. He changed the name of the capital to Constantinople in his honor and declared himself a Christian becoming the first Roman emperor to do so. Constantine's predecessor declared that Christianity become the state religion of the Eastern Roman, or the Byzantine Empire. The Byzantine Empire would expand to nearly the size of the Ancient Roman Empire and would single handedly spread the Christian religion across Europe, Russia, Near East and Northern Africa.

மூன்றாம் நூற்றாண்டில் ஆரம்பித்தாலும் கிபி 9ம் நூற்றாண்டுவரை அது அதிகமாகக் கொண்டாடப்படவில்லை. கிழக்கு தேசங்களில் ஜனவரி 6ம் தேதி கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டு வந்ததாகவும் வரலாறு உண்டு. அதற்கு இன்னொரு காரணம் உண்டு. ஏப்ரல் 6ம் தியதி இயேசு இறந்த தாய் ஒரு கணக்கு உண்டு, அதன் மூன்று மாதங்களுக்கு முன் இயேசு வின் பிறப்பு என்பதைப் போல அவர்கள் கணக்கிட்டார்கள். இப்படி நூற்றுக்கணக்கான ஆய்வுகளும், சிந்தனைகளும் டிசம்பர் 25ல் இயேசு பிறந்திருக்க வாய்ப்பில்லை என்பதையே கூறுகின்றன.

எது எப்படியோ, இயேசு டிசம்பர் 25ம் தியது பிறந்திருப்பதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவே. ஆனால் கிறிஸ்மஸ் என்பது அந்த நாளைக் கொண்டாடுவதல்ல, பாலனாம் இயேசுவின் பிறப்பை நினைவு கூருவதே. திருச்சபை நிர்ணயித்த ஒரு நாளில் அது கொண்டாடப்படுகிறது அவ்வளவு தான்.

இயேசு
"என்று பிறந்தார்"
எனும் விவாதங்கள் அர்த்தமற்றவை
"எதற்கென்று" பிறந்தார்
எனும் செய்தி ஒன்றே
அவசியமானது

வானியலாளர்கள்

மெர்லின், கண்ணனூர்

மத்தேயு 2-ம் அதிகாரத்தில் ஓர் பார்வை

சாஸ்திரிகள் இயேசுவை பணிந்து கொள்வார்கள் என்பதைக் குறித்து பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது.

உதாரணமாக. சங்கீதம் 68:30 - 32 "நாணலிலுள்ள மிருககூட்டத்தையும், ஜனங்களாகிய கன்றுகளோடுகூட ரிஷப கூட்டத்தையும் அதட்டும்; ஒவ்வொருவனும் வெள்ளிப்பணங்களைக் கொண்டுவந்து பணிந்துகொள்ளுவான்; யுத்தங்களில் பிரியப்படுகிற ஜனங்களைச் சிதறடிப்பார்." "பிரபுக்கள் எகிப்திலிருந்து வருவார்கள்; எத்தியோப்பியா தேவனை நோக்கி கையெடுக்கத் தீவிரிக்கும்." "பூமியின் ராஜ்யங்களே, தேவனை பாடி, ஆண்டவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்."

சங்கீதம் 72:10 "தர்ஷீசின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள்; ஷேபாவிலும் சேபாவிலுமுள்ள ராஜாக்கள் வெகுமானங்களைக் கொண்டு வருவார்கள்." மேலும் ஏசாயா 49:7, 60:3, 66:10. etc

இயேசு பிறந்த பிறகு ஞானிகள் அவரை தேடி வந்தனர். லூக்கா 2:16 -ன் படி இந்த சம்பவம் இயேசு பிறந்து ஒரு வருடத்திற்கு பின்பு நடந்திருக்கலாம் என யூகிக்கப்படுகிறது. அவர்கள் ஈராக் ஈரான்,

சவுதி அரேபியா, ஏமன், அல்லது இப்போதைய தெற்கு துருக்கி, வடக்கு சிரியாவில் உள்ள பகுதியில் இருந்து வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவர்கள் ராஜாக்களாக இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. மூன்று ராஜாக்கள் என்று அழைக்கப்ப ட்டாலும் வேதாகமம் அவர்களில் எத்தனை பேர் ராஜாவாக இருந்தி ருக்க கூடும் என்று குறிப்பிடவி ல்லை. ஒரு குறிப்பு(Theory) சொல்கிறது ஏமன் நாட்டின் அரசர்கள் யூதராக இருந்ததால் அவர்கள் ஏமனின் அரசர்களாக இருந்திருக்கலாம் என்று. மூன்று என்பது யூகம் தான் ஏனென்றால் அவர்கள் தங்களுடன் மூன்று பரிசுகளுடன் வந்ததால் அப்படிச் சொல்லப்படுகிறது. பல பேர் இரு ந்திருக்கலாம் மேலும் அவர்களு டன் பல வேலைக்காரர்களும் இருந்திருப்பார்கள் எனவும் சொல்லப்படுகிறது.

அவர்கள் நன்கு கற்றறிந்த அறிஞர்களாக இருந்தனர். ஆங்கிலத்தில் மேகி(Magi) என்று அழைக்கப்படுகிறனர். கிரேக்க (Greek) பதத்தில் மாகோஸ் (Magos) என்ற வார்த்தையிலிருந்து மேகி (Magi) என்ற வார்த்தை வருகிறது. இந்த மாகோஸ் என்ற வார்த்தை பழைய பாரசீக வார்த்தையான (Magupati) மகுபத்தி என்ற வார்த்தையில் இருந்து வருகிறது. இது ஜொராஸ்டிரிய மதம் போன்ற பண்டைய பாரசீக மதங்களின் ஒரு பிரிவில் உள்ள பூசாரிகளுக்கு வழங்கப்பட்ட பட்டம் இது. இன்று அவர்களை வான சாஸ்திரிகள் (ஜோதிடர்கள்) என அழைக்கி றோம். அப்போது வானியல் மற்றும் ஜோதிடம் ஒரே ஒட்டு மொத்த ஆய்வுகளின் ஒரு பகுதியாக இருந்தன. மேலும் இவைகள் ஒன்றுக் கொன்று இணைந்தே பயணித்தன. இவர் கள் கனவுகளை விளக்குபவர்கள் என்றும் அறியப்படுகிறார்கள் அதாவது தானியேலைப் போல. வான சாஸ்திரிகள் (Magi) என சொ ல் ல ப் ப டு கி ற வ ர் க ள் மதரீதியாக நட்சத்திரங்களின் வடிவங்களை பின்பற்றியிருக்க லாம். அவர்கள் மிகவும் பணக்கா ரர்களாகவும் தங்கள் சொந்த சமூகத்திலும் தங்கள் நாடு அல்லது மதத்தைச் சார்ந்தவர் களாலும் உயர்ந்த மரியாதையை கொண்டிருந்தார்கள். இவர்களை மந்திரவாதிகள் என்றும் அழைக்க லாம். குறிப்பாக பண்டைய காலங்களில் மந்திரவாதி என்ற பெயர் தீய கலைகளை செய்பவர்க ளுக்கு பயன்படுத்தப்படவில்லை மாறாக கற்றறிந்த மனிதர்களு க்கும், தத்துவஞானிகளுக்கும், இயற்கையை ஆராய்பவர்க ளுக்கும், வானியலின் இயக்கத்தை ஆராய்பவர்களுக்கும், மருத்துவத் திற்காக தங்களை அர்பணித்த வர்களுக்கும் வழங்கப்பட்டது. அவர்கள் வானத்தில் வழக்கத் திற்கு மாறாக புதிய நட்சத்திர த்தை வானில் கண்டு, அது இஸ்ரவேலில் ஒரு விசேஷித்த ராஜாவின் பிறப்பை முன்னறி

வித்தது என்பதை அறிந்திருந்தனர். வான சாஸ்திரிகள் (Magi) யூதருக்கு விசேஷித் மீட்பர் (Messiah) வருவார் என்ற தீர்க்க தரிசனங்களை அறிந்திருந்தனர்.

அவர்களைப் பற்றி புராணக் கதைகள் சொல்லப்படுகின்றன, மேலும் அவர்களுக்கு பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன.

காஸ்பர் (Gasper) அல்லது காஸ்பர் (Casper) பழுப்பு முடி, பழுப்பு தாடி அல்லது தாடி இல்லை மற்றும் பச்சை மேலாடை மற்றும் பச்சை நகைகள் கொண்ட தங்க கிரீடத்தை அணிந் திருந்திருந்தார், அவன் சேபாவின் ராஜா, காஸ்பர் என்பது இயேசுக்கு கொண்டு வரப்பட்ட நறுமண பொருளை குறிக்கிறது.

மெல்சியர் (Melchior) இவர் நீண்ட வெள்ளை முடி மற்றும் வெள்ளை தாடி கொண்ட மெல்சியர். தங்க மேலாடை அணிந்திருந்தார். இவர் அரேபியாவின் அரசர் ஆவார். மெல்சியர் இயேசுவுக்கு கொண்டு வரப்பட்ட தங்கத்தை குறிக்கிறது.

பால்தாசார் (Balthazar) கருப்பு தோல் மற்றும் கருப்பு தாடி (அல்லது தாடி இல்லை) மற்றும் ஊதா நிற மேலாடை அணிந்திருந்தார் மற்றும் எகிப்தின் அரசர் ஆவார். பால்தாசார் என்பது இயேசுவுக்கு கொண்டுவரப்பட்ட வெள்ளைப்போளம் பரிசை குறிக்கிறது.

ஞானிகள் இயேசுவையும் மரியாளையும் கண்டுபிடித்த போது அவர்கள் பெத்லகேம் அல்லது எருசலேமில் ஒரு சாதாரண வீட்டில் வாழ்ந்தி ருப்பார்கள், ஏனென்றால் அந்த நேரத்தில் இயேசு ஒன்று முதல் இரண்டு வயது வரை இருந்திருப்பார். அவர்கள் தங்கள் பரிசுகளை அவருக்கு வழங்கினர்.

ஞானிகள் குழந்தை இயேசுவுக்கு கொடுத்த பரிசு மிகவும் விசேஷமானது. கிறிஸ்தவர்கள் அதை பின்வரும் அர்த்தங்கள் இருப்பதாக நம்புகிறார்கள்.

தங்கம்(Gold): இது ராஜாக்களுடன் தொடர்புடையது. இயேசு ராஜாவுக்கெல்லாம் ராஜாவாக இருக்கிறார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்.

சாம்பிராணி (Frankincense): இது சில நேரங்களில் தேவாலயத்தில் வழிபாட்டிற்கென்று பயன்படுத்தப்படுகிறது .இயேசு வணக்கத்திற்குரியவர் என்பதை இது காட்டுகிறது. சாம்பிராணி சில நேரங்களில் ஒளிபனம் (oblibanum) என்றும் அழைக்கப்படுகிறது. இது போஸ்வெல்லியா (Boswellia) பேரினத்தில் உள்ள மரங்களில் இருந்து வரும் பிசின் ஆகும்.

வெள்ளைப் போளம் (Myrrh): இது ஒரு வாசனை திரவியம் ஆகும். இது இறந்தவர்களின் உடல்களில் நல்ல வாசனையை ஏற்படுத்த

வைக்கப்படுகிறது. இயேசு பாடுபட்டு இறப்பார் என்பதை அது காட்டுகிறது என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். வெள்ளைப் போளம் (Myrrh) என்பது கோம்பிபோரா (Commiphora) இனத்தில் உள்ள மரங்களில் இருந்து வரும் ஒரு பிசின் ஆகும்.

சாஸ்திரிகள் குனிந்து வணங்கினார்கள் என்னும் போது; அவர்கள் இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொண்டார்கள் என்பது புரிகிறது

கிழக்கு மற்றும் தெற்கு (அதாவது பழைய ஏற்பாட்டில் ஜெருசலேமின் எதிர்ப்பாளர்கள்) மேசியாவுக்கு அங்கீகாரம் கொடுத்தது முக்கியத்துவம் வாய்ந்தது. இயேசு பிறந்த போது, ஜெருசலேம் மக்கள் அதைப் பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை, ஆனால் அவரைத் தேடுவதற்காக தூர கிழக்கிலிருந்து வந்திருந்த அந்நியர்களிடமிருந்து பிறப்பின் செய்தியைப் பெற்றனர். அவர்கள் சொல்லும் வரை அதைப் பற்றி அவர்களுக்கு எதுவும்

(மத்தேயு 2: 11). மத்தேயு நற்செய்தியாளர் மட்டுமே நமக்கு பரந்த மற்றும் பிரகாசமான காட்சியை தருகிறார்; ஜெருசலேம் அவரை நிராகரித்தது ஆனால் கிழக்கு அவரை வரவேற்றது மற்றும் எகிப்து அவருக்கு அடைக்கலம் கொடுத்தது என்பதை அவர் நமக்குக் காட்டுகிறார். ஜெருசலேம் தனது மேசியாவை நிராகரித்த அதே வேளையில்,

தெரியாது என்பது மட்டுமல்லாமல், சொன்னதும், அவர்கள் கலக்கமடைந்தனர் [மத்தேயு 2:3]. **அதாவது ஆர்வத்தை எதிர்பார்த்திருக்க வேண்டிய இடத்தில் அலட்சியம், மகிழ்ச்சியைத் தேட வேண்டிய இடத்தில் குழப்பம்!**

கிழக்கிலிருந்து சாஸ்திரிகளின் வருகையானது இரட்சிப்பு உலகம் முழுமைக்கும் என்பதை அறிவிக்கிறது.

சாஸ்திரிகளும் இயேசுவும் இணையும் இடம் அறிவியலுக்கும் மதத்திற்கும் (Science and Religion) இடையே இருக்கிற ஒற்றுமையை விவரிக்கிறது

ஏரோது ஞானிகளிடம் இயேசுவை கண்டுபிடித்து அவர் எங்கே இருக்கிறார் என்று சொல்லும் படி கேட்டான். அவன் சொன்னபடி அவரைச் சென்று வணங்குவதற்காக அல்ல மாறாக அவரை கொல்வதற்காகவே கேட்டார். இயேசு ஒரு புதிய ராஜாவைப் போல தோன்றினார், அவர் வந்து ஏரோதின் வல்லமையை எடுத்துக் கொள்ள முடியும் என்று அவர் நினைத்திருந்தார்.ஏரோது ராஜாவைப் பற்றி பார்க்கும் போது. உண்மையிலே அவர் தனக்கு எதிராக யார் வருவதையும் விரும்புவதில்லை. தனக்கு எதிராக அரசர்களாக வந்து விடுவார்கள் என சந்தேகப்பட்டு, தன்னுடைய அரியணைக்காக, மக்காபிய இளவரசர் மற்றும் இளவரசிகளில் ஐந்து பேரைக் கொன்றிருக்கிறார். இதில் இவரது விருப்பமான மனைவி மரியம்னே -யும் அடங்கும். கிளர்ச்சியாளர்களை கண்டுபிடிப்பதற்காகவே பல ஒற்றர்களை வைத்திருந்தானாம் ஏரோது. (மேற்குறிப்பிட்டவைகள் ஜோசபஸ் எழுதிய வரலாற்று குறிப்பிலிருந்து). எனவே ஏரோது இயேசுவை கொல்ல நினைத்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் இயேசுவை யூதருக்கு ராஜாவாக அவன் அறிந்த பொழுது அவன் வயது சென்றவனாயிருந்தானாம். நிச்சயம் இயேசு வாலிப பிராயத்தை அடையும் போது தான் உயிரோடு இருப்பதில்லை என்பதை அறிந்தும் அவன் இயேசுவைக் கொல்ல நினைத்ததுதான் ஆச்சரியம். தன் குடும்பத்தினருக்காக செய்திருக்கலாமென்றால் அவன் தன் குடும்பத்தின் மீது அக்கறையில்லாதவனாயிருந்தான் என வரலாறு சொல்கிறது.

பெத்லகேம் : கிறிஸ்துவின் பிறப்பிடமான பெத்லகேம், ஜெருசலேமுக்கு தெற்கே ஆறு மைல் தொலைவில் ஒரு சிறிய நகரம். "பெத்லகேம்" என்ற வார்த்தை "அப்பத்தின் வீடு" என்பதைக் குறிக்கிறது . இது எப்பிராத்தா (Ephrata) என்றும் அழைக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் இது அதிகமான இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் 35:19; ரூத் 4:11; சங்கீதம் 132:6. இது தாவீதின் நகரம் என்று அழைக்கப்பட்டது லூக்கா 2:5 ஏனெனில் இது தாவீதின் பிறப்பின் நகரம், 1 சாமுவேல் 16:1, 1 சாமுவேல் 16:18. யோசுவா 19:15. கலிலேயாவிலும் பெத்லகேம் என்கின்ற நகரம் உண்டு; அதிலிருந்து வேறுபடுத்துவதற்காகவே இது யூதேயாவின் பெத்லகேம் என்று அழைக்கப்பட்டது. பெத்லகேமின் மண் அதன் வளத்திற்கு குறிப்பிடத்த க்கது. இந்த நகரம் மலைகள் மற்றும்

பள்ளத்தாக்குகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. தற்போது சுமார் 22,000 மக்கள் வாழ்கிறார்கள், முக்கியமாக கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் வசிக்கி ன்றனர், அவர்கள் அமைதியாக ஒன்றாக வாழ்கின்றனர். பெத்ல கேமுக்கு கிழக்கே சுமார் 200 அடிகள் தொலைவில் நமது இரட்சகர் பிறந்ததாகக் கூறப்படும் இடம் காட்டப்பட்டுள்ளது. அங்கே ஒரு தேவாலயம் மற்றும் ஒரு கான்வென்ட் உள்ளது; தேவாலயத்தின் அடியில் ஒரு நிலத்தடி தேவாலயம் உள்ளது, இது 32 விளக்குகளால் ஒளிரப்ப டுகிறது, இது இயேசு பிறந்த முன்னணை இருந்த இடம் என்று கூறப்படுகிறது.



அவமானம், பாடுகள் நஷ்டங்கள்.
இவைகளை ஏற்றுக் கொண்டதாலேயே
மரியாளால் கிறிஸ்துவை உலகிற்கு
கொடுக்க முடிந்தது.
இன்றும்
இவைகளை ஏற்றுக்கொள்ள
ஆயத்தமுள்ளவர்களால் மட்டுமே
கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு
கொடுக்க முடியும்.

தீவனத் தொட்டி
அறிவிக்கிறது
’இவரே
வாழ்வளிக்கும் உணவு’

உண்மையாய் கடவுளைத்
தேடுபவர்களுக்கு திருமறை
மட்டுமல்ல நட்சத்திரங்களும்
ஆகாயத்து பறவைகளும் புல்
பூண்டுகளும் கற்களும்
எல்லாமே கடவுளைச்
சொல்லும்

ஜான் டேனியேல், கொற்றியோடு

அர்த்தமற்ற கொண்டாட்டம்

நமதாண்டவர் இயேசுகிறிஸ்து இப்பூமியில் மகவாய்ப் பிறந்ததைக் கிறிஸ்துமஸ் தினமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இந்தக் கொண்டாட்டங்களை நம்மைச் சுற்றி வாழ்கின்ற மக்கள் கவனிக்கிறார்கள். அவர்களில் கிறிஸ்துவை அறிந்தும் அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் உண்டு; கிறிஸ்துவை அறியாமல் இருக்கின்றவர்களும் உண்டு. அவர்கள் இந்தக் கொண்டாட்டங்களைப் பார்ப்பது மாத்திரமல்ல, கிறிஸ்துவைக் குறித்த மதிப்பீடுகளையும் தங்களுக்குள் உருவாக்கிக் கொள்கிறார்கள். எனவே அவற்றின் தரம் குன்றாமல் பாதுகாக்க வேண்டியது கிறிஸ்தவர்களாகிய நமது பொறுப்பு.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் இன்றைக்குப் பிரமாண்டமான குடில்களாகவும், ஆட்டம் பாட்டமாகவும், பெருந்தீனிகளாகவும், பரிசுகளும் பவனிகளுமாகவும், ஆடைகளும் அணிகலன்களுமாகவும் உருமாறிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் 'எது சரி? எது தவறு?' என்ற விவாதத்தில் நுழைவதைக்காட்டிலும், உண்மைக் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களின் தரத்துக்கான அளவுகோல் எது என்ற கேள்விக்கான பதிலைக் காண முயல்வது நன்று என நான் நினைக்கிறேன்.

நாம் யாருடைய பிறப்பைக் கொண்டாடுகின்றோமோ, அவருக்கு அந்தக் கொண்டாட் டங்கள்

பிரியமுள்ளவைகளாக இருக்க வேண்டும்.

நமது இல்லத்தின் மூத்த பெரியவர் ஒருவரின் பிறந்த நாளை நாம் கொண்டாடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். அவர் மிகவும் நல்லவர், எந்தத் தீய பழக்கமும் இல்லாதவர். அவரது பிறந்த நாளில் பிள்ளைகள் எல்லாரும் அமர்ந்து மது அருந்தி அமர்க்களப்படுத்தினால் அவர் ஏற்றுக் கொள்வாரா?

அந்தச் செயல் அவரை வேதனைப்படுத்தும் என்பதால் பிள்ளைகளும் அப்படிச் செய்யத் துணிய மாட்டார்கள். அதுபோன்றே நமதாண்டவரின் பிறப்புக் கொண்டாட்டங்கள் அவரைத் துக்கப்படுத்துபவைகளாக இருக்குமானால் அவற்றை முற்றுமாய்த் தவிர்க்க வேண்டும்.

இயேசுகிறிஸ்து எப்படிப் பிறந்தார்? அவரது இதய விருப்பங்கள் என்ன? நமது எந்தச் செயல்கள் அவரை மகிழ்ச்சிப்படுத்தும்? எந்தச் செயல்கள் அவருக்குத் துக்கத்தைத் தரும்? இயேசு இந்த உலகத்தில் வந்த நோக்கம் என்ன? என்னும் கேள்விகளுக்குத் மிகத்தெளிவான விடைகள் சத்திய வேதத்தின் நற்செய்தி நூல்களில் இருக்கின்றன. அவற்றை நன்றாகக் கற்று, அதற்கேற்ப அவரது பிறப்பைக் கொண்டாடுவோம்.

இயேசுகிறிஸ்துவே முகம் சுளிக்கும் முறைகளிலும், அவர் பிறந்த நோக்கத்துக்கு முழுவதுமாக முரண்பட்ட நிலையிலும், அவரது மகிமைக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் அவரது பிறப்புக் கொண்டாட்டங்கள் அமையுமானால் அவை முற்றிலும் பயனற்றை என்பது மாத்திரமல்ல, யாருடைய பிறப்பை நாம் கொண்டாடுகிறோமோ அவரது கோபத்துக்கே நாம் ஆளாக நேரிடும் என்பதையும் நினைவில் கொள்வோம்.

கொண்டாடுகிறோம் என்னும் பெயரில் நமது இதயத்தின் தீமையான விருப்பங்களுக்கு வடிகால் தேட வேண்டாம். நமது பெருமையைப் பறை சாற்றுவதற்கு முயல வேண்டாம். பிரமாண்டம் என்னும் பெயரில் சுய புகழ்ச்சியைத் தேட வேண்டாம். கவனமாயிருப்போம், நாமும் இடறி பிறரையும் இடறச் செய்ய வேண்டாம்.

முழு மனுக்குலத்திற்கும் மகிழ்ச்சியைத் தர வந்த கிறிஸ்துவின் பூவுலகப் பிரவேச தினம் அவரது உள்ளம் மகிழும்படி ஆசரிக்கப்பட அவர் தாமே நமக்கு உதவுவாராக!

குழந்தைகளை அழிக்கும் ஏரோதுக்கள்.

Naveen Solomon
Hyderabad

இன்றைய குழந்தைகளின் சவால்கள்

மத் 2.16 - 18 வரை, பெத்லகேம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசித்த இரண்டு வயதுக்குட்பட்ட அனைத்து ஆண் குழந்தைகளை கொலை செய்யப்படுவதை பற்றி விவரிக்கிறது; நினைத்துப் பாருங்கள் நிலைமை எவ்வளவு மோசமாக இருந்திருக்கும். பெத்லகேம் நகரத்தின் தெருக்கள் இரத்த ஆறுகளாகவும் நகரமே ஆறுதலற்று போயிருக்கும்.

நாம் இங்கு ஆராய போவது, ஏன் இது நடந்தது என்பதல்ல! இன்றும் நடக்கும் குழந்தைகளின் அழிவை பற்றியே. ஆம் குழந்தைகளை அழிக்கும் இன்றைய ஏரோதுக்கள்...பற்றியே!

1) தற்போது உலகமே பயத்துடனும் நடுக்கத்துடனும் பார்த்துக் கொண்டிருக்கிற ரஷ்யா மற்றும் உக்ரைன் போரில் கூட அநேக குழந்தைகள் கொடூரமாக கொல்லப்படுவதை நாம் செய்திகள் வாயிலாக அறிய முடிகிறது. நவம்பர் 14, 2022 ஐக்கிய நாடுகள் சபைகள் அலுவலகம் மூலம் வெளியிட்ட அறிக்கையில், போர் தொடங்கியதிலிருந்து உக்ரைனில் குறைந்தது 972 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் அநேக குழந்தைகள் காயமடைந்தனர் என்றும் சராசரியாக ஒவ்வொரு நாளும் ஐந்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் கொல்லப்படுவதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இன்றும்

தொடர்கிறது....

2) கருக்கலைப்பு (Abortion) என்னும் பெயரில் நடக்கும் படுகொலைகள்...

கருக்கலைப்பு சரியானது என வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. குழந்தைகள் கடவுளால் அருளப்படும் ஆசீர்வாதம் என்றுதான் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில் வாசிக்க முடிகிறது. குழந்தைகளை பாரமாக இல்லாமல் கடவுள் கொடுத்த பாக்கியமாக கருதப்பட வேண்டும். குறைபாடுள்ள குழந்தைகளும் இறைவனிடமிருந்து கிடைக்கும் வெகுமதியே.

ஆதியாகமம் 30:2 ல்,ஜேக்கப் குழந்தைகளை தேவனுடைய ஈவு என்று குறிப்பிட்டுள்ளார். லேயாள் தன் ஐந்தாவது மகனை பெற்றெடுத்த போது அவள் அவனை இசக்கார் என்று அழைத்தாள். இசக்கார் என்பதற்கு வெகுமதி என்று பொருள். அவள் ஆறாவது மகனை பெற்றெடுத்த போது கடவுள் எனக்கு நல்ல கொடையை கொடுத்தார் என்று கூறினாள் (ஆதியாகமம் 30: 20)

பழைய ஏற்பாட்டில் மகப்பேரு நிலையில் உள்ளவர்களுக்கு மிகுந்த மரியாதை கொடுக்கப்பட வேண்டும் என்பது மோசேயின் கட்டளையாகும். மேலும் ஒரு பெண்ணின் வயிற்றில் வளரும் குழந்தைக்கு தீங்கு விளைவிப்பவர் தண்டிக்கப்பட வேண்டும்

என்றும் உயிருக்கு உயிர்; கண்ணுக்கு கண்; பல்லுக்கு பல், கைக்கு கை; காலுக்கு கால்; சூடுக்கு சூடு, தழும்புக்கு தழும்பு என தண்டனை கொடுக்கப்பட வேண்டும் எனவும் சொல்கிறது. (யாத் 21:22-25)

கடவுள் உயிர்களின் கடவுள் என்றும் அவர் படைத்த ஒவ்வொன்றும் விலைமதிப்பற்ற பாதுகாக்கப்பட வேண்டியவை என்றும் பைபிள் உறுதிப்படுத்துகிறது. (சங்.8) ஆரம்பகால கிறிஸ்தவர்கள், யூதர்களின் வழியை பின்பற்றி கருக்கலைப்பு தவறு என கண்டனம் செய்தனர்.

கொலை செய்யாதே; நீ கருக்கலைப்பு செய்யாதே; சிசுக்கொலை செய்யாதே என்ற எச்சரிக்கை தேவாலய போதனைகளின் பண்டைய கையேடான டிடாக்கே (Didache) -ல் நம்மால் பார்க்க முடியும் (டிட். 2:2)

இன்று சில தம்பதிகள் குழந்தைகளைப் பெற தயாராக இல்லை என்பதையும்; அவர்கள் திட்டமிடாமல் திடீரென்று கர்ப்பமாகிவிட்டால் அவர்கள் குழந்தையை கருக்கலைப்பு செய்ய முடிவு செய்கிறார்கள் என்பதையும் பார்க்க முடிகிறது. அதாவது அவர்கள் கருவை கொன்று விடுகிறார்கள். பெண் குழந்தையை கொல்லும் நோக்கிலும் கருக்கலைப்பு செய்யப்படுகிறது.

3) கருவுறுவதை தடுத்தல்.....
தற்போதைய சூழ்நிலையில் பல பெண்கள் தங்கள் வெளிப்புற அழகை குறித்து கவலைபடுகின்றனர். அவர்கள் தங்கள் அழகையும் உருவத்தையும் இழக்க விரும்பவில்லை. இதனால் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பெண்களை வாடகை தாயாக வேலைக்கு அமர்த்தி அவர்கள் மூலம் குழந்தைகளை பெற்றுக் கொள்கிறார்கள்.

உதாரணமாக நடிகைகள் நயன்தாரா, பிரியங்கா சோப்ரா, லட்சுமி மஞ்சு, ஷில்பா ஷெட்டி, ப்ரீத்தி ஜிந்தா, சன்னி லியோன், லிசா ரே போன்ற பாலிவுட் பிரபலங்கள் வாடகை தாய் மூலமாகவே தங்கள் குழந்தைகளை பெற்றுக் கொண்டுள்ளனர்.

புதிய பாட்டில் இயேசுவின் தாயான மரியாள் தனது பேறுகாலத்தில், கடவுளின் சித்தத்தை நிறைவேற்ற, நாசரேத்தில் இருந்து பெத்லகேமுக்கு பயணித்து, பல போராட்டங்களை சந்தித்து, பல மைல்கள் பயணம் செய்து இயேசுவை பெற்றெடுத்தாள். மரியாளையும், குழந்தை பெறுவதை சுமையாகக் கருதி வாடகைத்தாய் முறையை தேர்ந்தெடுக்கும் நபர்களின் வாழ்க்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அப்பெண்கள் எவ்வளவு சுயநலவாதிகளாகவும், சோம்பேறிகளாகவும், இயற்கைக்கு மாறானவர்களாக மாறிவிட்டனர் என்பதை நன்கு அறிய முடியும்.

பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுலின் கூற்றுப்படி பெண்களின் முக்கிய பொறுப்புகளில் ஒன்று குழந்தை பேறு ஆகும். இதில் பிரசவம், குழந்தைகளை வளர்ப்பது மற்றும் வீட்டை பராமரிப்பது தொடர்பான அவர்களின் வீட்டு பொறுப்புகள் இவ்விரண்டும் உள்ளடங்கும். (தீமோத் 2:15, 5:14)

ஒரு குழந்தையை பெற்றெடுப்பது கணவனுக்காக மனைவி செய்யும் நற்செயலாக கருதப்பட்டது. மேலும் அவர்களுடைய குடும்பத்துக்கும் செய்யும் உன்னதமான பங்களிப்பாகும். குழந்தைகளை பெற்றெடுப்பது மற்றும் வளர்ப்பது இன்றும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தெய்வீக வடிவமைப்பின் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது. குழந்தைகளை பெற்றெடுப்பதும் வளர்ப்பதும் திருமணத்திற்கான கடவுளின் திட்டத்தின் இன்றியமையாத பகுதியாகும் என்பதை வேதம் தெளிவாக வெளிப்படுத்துகிறது. திருமறை குழந்தைகள் இறைவனின் ஆசிர்வாதம் என கூறுகிறது.

4.தாய்ப்பால்...

பழைய ஏற்பாட்டில் பார்வோனின் மகள் குழந்தையை பராமரிக்கக் கூடிய ஒரு எபிரேய பெண்ணை தேடுவதை யாத்திராகம புத்தகத்தில் நம்மால் வாசிக்க முடியும். அவள் ஒரு பெண்ணை கண்டதும் இந்த குழந்தையை எடுத்து அதற்கு வேண்டியதை செய்யும்படியாக பார்வோன் கட்டளையிட்டாள்.

இயற்கை கொடையான தாய்ப் பாலுக்கு பதிலாக குழந்தைக்கு எந்த பேபி பவுடர் (Baby powder) சிறந்தது என்று தாய்மார்கள் தேடும் அவல நிலையை இப்போது நம்மால் காண முடிகிறது. பால் பவுடர்களில் நோய் எதிர்ப்பு சக்தி இல்லை, அவை குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தாது, மேலும் இது செயற்கையாக தயாரிக்கப்பட்டதால் குழந்தையால் எளிதாக ஜீரணிக்க முடியாது. ஜீரணிக்கு அதிக நேரம் எடுக்கலாம், சில சமயங்களில் பால் குடித்த உடனே குழந்தை வாந்தி எடுக்கக்கூடும்.

குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டு தல் என்பது நீண்ட கால செயல் பாடாகும். கிட்டத்தட்ட இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை அவை நீடிக்கும். அப்பொழுது பல் வேறு நோய்களிலிருந்து குழந்தை களை பாதுகாக்கும் எதிர்ப்பு சக்தி யானது இயற்கையாகவே தாய்ப் பாலில் இருந்து அவர்களுக்கு கிடைக்கிறது. தாய்ப்பால் ஊட் டுதல் என்பது பண்டைய காலங் கள் தொடங்கி ஒரு பொதுவான நிகழ்வாகவே இருந்தது. இது குழந்தைக்கு உணவளிப்பதற்காக கடவுளின் உன்னதமான வடிவமைப்பாகும்.

இன்றைய குழந்தைகள் நாளைய சமூகத்தில், தேவாலயத்தில் மற் றும் தேசத்தின் எதிர்கால தலை வர்களாக மாறவிருப்பவர்கள். அவர்களை பாதுகாக்கவும் பாதுகாப்பாக வைத்திருப்பதும் நாம் அனைவரின் மிக முக்கி யமான கடமையாகும். திருமறை யும் குழந்தைகளை, கடவுளுடைய ராஜ்ஜியத்திற்குரியவர்கள் என்று அழைக்கிறது. குழந்தைகளைப் போல மாறாதவர்கள் கடவுளின் ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியாது என்றும் எச்சரிக்கிறது. குழந்தைகள் மிகத் தூய்மை யானவர்கள், அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கும் பண்பு டையவர்கள், அனைவரையும் மதிக்கும் குணம் பெற்றவர்கள், சாதி மத பேதம் இன்றி யாவரோடும் பழகக்கூடிய பண்புடையவர்கள்.

சிறு பிள்ளைகளையும் தேவால யத்தின் எதிர்காலமாக மாற்று வதும் அவர்களுக்கு கடவுளுடைய வார்த்தைகளை கற்பிப்பதும் சிறந்தவர்களாக வளர்த்தெ டுப்பதும் நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடும் வேளையில், குழந்தைகளின் பிறப்பிலும், வளர்ப்பிலும் கவனம் செலுத்துவோம்.

கிறிஸ்மஸ் கால சிந்தனைகள்

மெர்லின், கண்ணனூர்

தூதர்களின் அறிவிப்பால் மேய்ப்பர்கள் இயேசுவை கண்டனர்; நட்சத்திரத்தின் பிரகாசத்தால் சாஸ்திரிகள் இயேசுவைக் கண்டனர்; நம் வாழ்வால் இன்றையவர்களும் இயேசுவை காணட்டும்.

இரவானாலும் இயேசுவை பார்க்கப் போன மேய்ப்பர்களும்; தூரமானாலும் இயேசுவைப் பார்க்கப் போன சாஸ்திரிகளும்; பகலானாலும் சபைக்கு போகாமல் சாக்கு போக்கு சொல்லும் நமக்கு பாடமே.

என்னுடைய ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதில்லை என்பதை, அரண்மனையை புறக்கணித்து, முன்னணையை தெரிந்து கொண்டதிலிருந்தே நாம் அறிந்து கொள்ளலாம்

பிரயாணிகள் நிரம்பியிருந்ததால் சத்திரத்தால் இயேசுவுக்கு இடம் கொடுக்க முடியவில்லை. பாவங்கள் நிரம்பியிருந்தால் உன்னாலும் இயேசுவுக்கு இடம் கொடுக்க முடியாது.

அரண்மனையில் இயேசு இருப்பார் என சாஸ்திரிகள் தேடியதை முட்டாள்தனம் என சொல்லும் நாம்தான்; இயேசுவுக்கென்று கோடிக்கணக்கில் பிரம்மாண்ட ஆலயங்களை கட்டிக்கொண்டிருக்கிறோம்.

கிறிஸ்மஸ் கால சிந்தனைகள்

மேய்ப்பர்கள் அரண்மனைக்கு வர முடியாது என்பதாலோ
முன்னணையில் பிறந்தீர்!

பெண்களை அடிமைப்படுத்திய காலத்தில்; மரியாளை
அவமானப் படுத்தக் கூடாது என நினைத்த யோசேப்பு
குடும்பத்தலைவர்களுக்கு ஓர் மாதிரியே.

மனிதர்கள் தங்களை கடவுளாக உயர்த்திய வரலாறு பல உண்டு
ஆனால் கடவுள் ஒருவர் மனிதனாக தாழ்த்திய வரலாறு
இயேசுவுக்கு மட்டும்தான் உண்டு.

விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகம் வந்த இயேசு எங்கே;
வீட்டுக்கடுத்த தெருவில்தான் ஊழியக்களம் இருக்க வேண்டும்
என விரும்பும் நாம் எங்கே!

தியாகம் என்பது நமக்கு என்றோ ஓர் நாள் இடப்பது,
அவருக்கோ பிறப்பு முதல் இறப்பு வரை.

தன் பெற்றோரை முதியோர் இல்லத்தில் விட்டுவிட்டு;
இயேசுவுக்கு சத்திரத்தில் இடமில்லையே என வருத்தப்படும்
கிறிஸ்தவர்களுமுண்டு இவ்வுலகில்.

இன்றைய Carol
வருகையை அறிவிப்பதை விட
வரவை அதிகரிக்கவே முயற்சிக்கிறது

கிறிஸ்மஸ் கால சிந்தனைகள்

ஆதாமிலிருந்து பெண் படைக்கப்பட்டாள் என சொல்லி பெண்களை இரண்டாம் நிலைக்கு தள்ளுபவர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தான்; பெண்ணிலிருந்து இரண்டாம் ஆதாமை படைத்தாரோ!

முன்னணை சொல்கிறது .... நம் ஆண்டவர் நம்மில் வருவதற்கு ஏழ்மை ஒரு தடையேயில்லை; திறந்து கொடுத்தால் நம் குடிசைதான் அவருக்கு அரண்மனை.

நினைத்தபடி அரண்மனையில் இல்லையே என்பதால் முன்னணைக்கு போகாமலில்லை சாஸ்திரிகள். ஆனால் இன்று பலர் தாங்கள் விரும்பியபடி கடவுள் இல்லையென திரும்பிப் போய்விடுகின்றனர்.

புறப்பட்டு போங்கள் வழிக்கு எதையும் எடுத்துச் செல்லாதீர்கள் என்றவர்; தானும் அப்படித்தான் விண்ணுலகிலிருந்து வெறுமையாகவே வந்தார்.

பாவத்திற்கு தண்டனை பூமிக்கு மட்டுமென நினைத்தேன். அது விண்ணையும் அசைத்தது. கடவுளும் மனிதனாக வேண்டியதாயிற்றே; ஆம் .... பாவம் கொடியது



சிந்திக்கும் காலம் மற்றும் செயல்படும் நேரம்

Rev M ஜோஸ் குமார்
CSI Kanyakumari Diocese

வருகையின் காலம் (Advent Season) என்பது கிறிஸ்துவின் பிறப்பிற்காக ஆயத்தப்படு காலம் ஆகும். கிறிஸ்து பிறப்புக்கு முன்வரும் நான்கு ஞாயிற்றுக்கிழமைகளை உள்ளடக்கிய காலம் வருகையின் காலம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலம் மானிட மகன் மனுமக்களை சந்தித்த காலம். விண்ணுலகமும் மண்ணுலகமும் சந்தித்த சந்தர்ப்பம் அது. விண் தூதர் மண்ணின் மக்களை சந்தித்த காலம். இச்சந்திப்பு நமக்கு தரும் சிந்தனைகளை சுருக்கமாக சிந்திப்போம்.

1) தூதன் சகரியா சந்திப்பு :

தேவ சந்திதியிலே ஆசாரிய ஊழியம் செய்து வருபவர் சகரியா (லூக் 1:8). அவருக்கு காபிரியேல் என்னும் தூதன் நற்செய்தியை அறிவித்தார் (லூக் 1:19) தேவ சந்நிதியில் காபிரேயேல் சந்திப்பு நிகழ்ந்தது. விண்ணிலிருந்து மண்ணிற்கு தூதனால் கெண்டு வரப்பட்ட வல்லமையின் செய்தி நற்செய்தி. விண்ணின் மணம் மண்ணில் கமழவும் இறையாட்சி பூவுலகில் மலரவும் மனிதனுக்கு அவசியமாய் அமைவது விசுவாசம் (or) இறை நம்பிக்கை. லூக் 1:18 - ல் "அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி: இதை நான் எதினால் அறிவேன்; நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே என்றான்." விண்ணிலிருந்து மண்ணிற்கு

சுமந்து வரப்பட்ட நற்செய்தியை இயல்பு நிலை ஏற்க மறுக்கிறது. ஒவ்வாமை என ஓரம்கட்ட நினைக்கிறது. ஆனால் மனுஷீகத்தில் தெய்வீகத்தை பொருந்த செய்வதே நற்செய்தியின் வல்லமை. மனுஷீகமும் தெய்வீகமும் ஒருங்கிணைந்து செயல்படுவதில் ஏற்படும் தடுமாற்றமே விசுவாச குறைபாடு. மனித ஆற்றலின் அளவீடு மற்றும் மதிப்பீடு மனிதனை மட்டுப்படுத்துகிறது. ஓர் எல்லையை நிர்ணயிக்கிறது. இதற்கு மேல் செல்ல இயலாது என்று ஓர் இயல்பு நிலையை உருவாக்குகிறது. மட்டுப்படுத்தப் பட்ட மனுஷ இயல்பு மனித வாழ்வுக்கு மனமடிவு, சோர்வு, விரக்தி இவைகளை கொண்டு வருகிறது. அதே நேரம் மனிதனை மட்டுப்படுத்துகின்ற இயல்பு வாழ்வை தாண்டுவதற்கான தெய்வீக ஆற்றலை நற்செய்தி தருகிறது. அதனால் வரும் தேவ மகிமையை ஏற்பதும், நிராகரிப்பதும் நற்செய்தியை மனிதன் விசுவாசிப்பதில் அமைகிறது. லூக் 1:20 -ல் "இதோ, தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய் என்றான்." இவ்வசனம் கற்பிக்கும் செய்தி என்னவெனில் நற்செய்தியானது நம்பிக்கை குறைபாடுள்ள மனிதனாகிய சகரியாவை புறம் தள்ளவில்லை. மாறாக நம்பிக்கை குறைபாடுள்ள மனிதனிலேயே நம்பிக்கையின் நற்செய்தி விதைக்கப்படுகிறது. நம்பிக்கையின் விதையாகிய நற்செய்தி வளர்ந்து வரும் காலத்தில் தேவ மகிமையை வெளிப்படுத்த வேண்டிய சகரியா விசுவாச குறைபாட்டால் தன்னிலே வளரும் நற்செய்திக்கு சான்று பகர தடுமாறுகிறார். கடவுளின் மகிமையை வெளிப்படுத்துவதில் சகரியாவின் விசுவாசக குறைபாடு அசௌகரியத்தை ஏற்படுத்திற்று. லூக் 1.24,25-ல் அவன் மனைவியாகிய எலிசபெத்து கர்ப்பவதியாகி: ஜனங்களுக்குள்ளே எனக்கு உண்டாயிருந்த நிந்தையை நீக்கும்படியாகக் கர்த்தர் இந்த நாட்களில் என்மேல் கடாட்சம் வைத்து, எனக்கு இப்படிச் செய்தருளினார் "என்றாள்

நற்செய்தியை பெற்றுக் கொண்டு அதை அனுபவிக்கும் எலிசபெத்தின் அறிக்கை கடவுளுக்கு மகிமையாய் அமைந்தது. நற்செய்தி எனக்கு உண்டாயிருந்த நிந்தையை நீக்கிப் போட்டது என்று எலிசபெத் சான்று பகர்ந்தாள்.

2) தூதன் மரியாள் சந்திப்பு.

ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத் தென்னும் ஊரில் மரியாள் என்னும் கன்னிகையை சந்தித்தான் (லூக் 1: 26,27). தூதனின்

வார்த்தைகளால் மரியாள் கலக்கம் அடைந்தாள் (லூக் 1:29). ஆனால் லூக் 1:30, 31-ல் "தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். " இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்." என் றான். அதற்கு மரியாள் தூதனை நோக்கி இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள் (லூக் 1:34). நற்செய்தி ஓர் அபத்தமான செய்தியாய் அமைதல் கூடாது என்பதில் உறுதியாய் இருந்தாள். மனுஷீக திட்டமிடுதலைக் குறித்த அறிவைப் பெற்றிருந்த மரியாளுக்கு தெய்வீக திட்டமிடுதல் மறைவாயிருந்தது. நற்செய்தியை அங்கீகரிப்பதன் மூலம் தனக்கு நிந்தை வந்து விடக் கூடாது என்பதில் உறுதியாயி ருந்தாள். ஆனால் நற்செய்தி என்பது நிந்தையை சுமந்து வரும் செய்தி அல்ல; அதனுள் பரிசுத்தம் இருக்கும். லூக்கா 1: 35-ல் "தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக; பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்." என்றான்

இறைவனின் தெய்வீக திட்டத்தால்தான் ஆண்டவரின் தாயார் என்கிற உன்னத நிலையை அடையப் போவதை அறிந்த மரியாள் லூக் 1:38 - ல்"அதற்கு மரியாள்: இதோ, ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.

எனக்கு என்ன சம்பவிக்க வேண்டும், என்ன சம்பவிக்க கூடாது என்பதனை நானே தீர்மானிப்பது மனுஷீகம்

எனக்கு என்ன சம்பவிக்க வேண்டும் என்பதை இறை தீர்மானத்திற்கு விட்டு விடுவது தெய்வீகம்.

ஆம். நம் மனுஷீகத்தை தெய்வீகம் மேற்கொள்ள இந்த கிறிஸ்மஸ் காலம் உதவட்டும்

நாங்கள் உங்களிடத்தில் எதிர்பார்ப்பது

நீங்கள் இந்த பத்திரிகையால் ஆசீர்வதிக்கப்பட்டால்,
தயவு செய்து உங்கள் கிறிஸ்தவ நண்பர்களோடு
இதை பகிர்ந்து கொள்ளுங்கள்

மாதந்தோறும் இப்பத்திரிகையை நீங்கள் பதிவிறக்கம் செய்ய விரும்பினால், +918668047378 என்ற Whatsapp எண்ணுக்கு <SEED MAG> என sms அனுப்பவும்.

உங்களால் முடிந்தால் இந்த பத்திரிகையை கறுப்பு வெள்ளையில் அச்சிட்டு electronics device இல்லாதவர்களுக்கு படிக்க கொடுத்து உதவுங்கள்

உங்கள் படைப்புகளையும் அனுப்பலாம். தகுதியுள்ளவைகள் பிரசுரிக்கப்படும்.

இறை மக்கள் சிலருடைய பண உதவியினாலே இந்த பத்திரிகையை எங்களால் வெளியிட முடிகிறது, நீங்களும் நன்கொடை அளிக்க கடவுளால் உந்தப்பட்டால் அனுப்பலாம். உற்சாகமிருந்தால் மட்டுமே, கட்டாயமல்ல

அன்புடன்: Bro. மெர்லின், நல்ல நிலமாகு நண்பா

நன்கொடை அளிக்க விரும்புபவர்களுக்கு...

QR Code

Google Pay id: +91 9486954577
BHIM/UPI : merlin.kannanoor@okaxis

Account Number: 0480053000011726
IFSC: SIBL0000480
Account Name: MERLIN S
Branch Name : MARTHANDAM
Bank Name: South Indian Bank